[1994 மார்ச் 22

65-

புவனகிரி நெசவாளர்களுக்கு நூலும், ஜரிகையும் வழங்குதல்

***20409-**செல்வி கோ. மல்லிகா :*

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) புவனகிரி ஒன்றியம், புவனகிரி பட்டு மற்றும் பருத்தி நெசவாளர்களுக்கு நூலும், ஜரிகையும் உடனுக்குடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம், புவனகிரி ஒன்றியத்திலுள்ள பருத்தி, பட்டு நெசவாளர் சங்கங்களை சேர்ந்த நெசவாளர்களுக்கு நூல், ஜரிகை, பட்டு தொடர்ந்து தடையின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10—25

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது என்று கூறினார்கள். ஒருசில மாதங்களுக்கு இவ்வாறு தடைபட்டு இருந்தது; அதனால் இதைக் கூறினேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் எதிலும் தட்டுப்பாடு இல்லாமல் இருப்பது என்கிற சூழ்நிலையில், இந்தப் பட்டு நெசவாளர்களுக்கும் அனைத்தும் தட்டுப்பாடின்றிக் கிடைக்க அரசு வழிவகை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பின் கீழ் இருக்கிற புவனகிரி ஒன்றியத்தில் செயல்பட்டு வருகிற இரண்டு பருத்தி, பட்டு நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு மாதம் ஒன்றுக்கு சராசரி 98,858 ரூபாய் மதிப்புள்ள பட்டும், 58,007 ரூபாய் மதிப்புள்ள ஜரிகையும், 1,77,176 ரூபாய் மதிப்புள்ள நூலும் தொடர்ந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 66, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்,